Erziehungsdepartement des Kantons Basel-Stadt

**Volksschulen**

▷ Primarstufe Basel

▶ **Kindergärten;>**

## ஆயத்தம், ஆரம்பம், பாலர்பாடசாலை

பிள்ளைகள் ஒருவருக்கொருவர் வித்தியாசமானவர்கள் அவர்களுக்கு வெவ்வேறு வகையான உதவிகள் தேவைப்படுகிறது. அவற்றை ஒழுங்கு செய்கிறது பாலர் பாடசாலை.
அன்பான பெற்றோர்களே! உங்கள் பிள்ளை பாலர் பாடசாலை செல்ல வீட்டில் நீங்கள் ஆயத்தப்படுத்தலாம்.
நாங்கள் நான்கு வகையான வழி முறைகளில் உங்களுக்கு வழிகாட்டுகிறோம். அதன்வழி நீங்களும் உங்கள் பிள்ளைக்கு பயிற்சி அளிக்கலாம்.

### 1. உணர்வு மற்றும் சமூக ரீதியிலான வளர்ச்சி

- காலை முழுவதும் அன்னிய கவனிப்பில் இருத்தல்
- எல்லைகளை ஏற்றுக்கொள்ளல்
- ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்
- சொந்தத் தேவைகளைத் தெரியப்படுத்துதல் அத்தோடு மற்றவர்களின் தேவைக்கு மதிப்பளித்தல்
- மற்றைய பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுதல்
- தாய் மொழியில் கதைத்தல்

### 2. செயற்பாடு

- பூங்காவில், காட்டில், விளையாட்டிடத்தில் ஓடுதல், ஏறுதல், சமநிலையில் இருத்தல்
- முதல் அனுபவமாக, தாள், கத்தரிக்கோல், பசை, நிறப்பென்சில் என்பவற்றைத் தெரிந்து கொள்ளல்

### 3. கற்கும், விளையாடும் விதங்கள்

- பத்து நிமிடம்  ஆழ்ந்து விளையாடுதல்
- சிறிய கதைகளை கவனமாகச் செவிமடுத்தல்
- இலகுவான புதிர்ப் படங்களை ஒன்றுசேர்த்தல்

### 4. உதவியின்றி தானாகச் செயற்படல்

- உடையைத் தாமாகக் கழற்றுதல் போடுதல்
- தாமாக மலசல கூடத்திற்குச் செல்லுதல் (விண்டெல்ன் தேவையில்லை)
- தாமாகவே கைகள் கழுவுதல்
- தாமாகவே மூக்குத் துடைத்தல்

## உங்கள் பிள்ளை நன்கு படிக்கலாம், அவர்

- நன்கு நித்திரை கொண்டிருந்தால்
- போதுமான அளவு சாப்பிட்டிருசந்தால்
- வெளியில் நன்கு சுறுசுறுப்பாயிருந்தால்
- ஒரு நாளைக்கு 30 நிமிடத்திற்கு மேல் தொலைக்காட்சி, கணணி போன்றவற்றின் திரையைப் பார்க்காதிருந்தால்

## பாசலில் உள்ள பாலர் பாடசாலைகள் உங்களது நல்ல தொடக்கத்தை விரும்புகிறது.